செ.வெ.எண்.58 நாள்: 21.08.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவைக்கான மருத்துவ உதவியாளர் மற்றும் ஓட்டுநர் பணிக்கான வேலைவாய்ப்பு முகாம் திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 28.08.2017 அன்று நடைபெறுகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை லெக்சரர் கூட்டரங்கில் 108 - GVK EMRI நிறுவனம் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் மற்றும் அவசரகால மருத்துவ உதவியாளர்கள் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு முகாமினை 28.08.2017 அன்று நடத்த இருக்கிறது. இதில் தேர்வு செய்யப்படவுள்ளவர்கள் இரவு,பகல் என 12 மணி நேர ஷிப்ட் முறையில் தமிழகத்தின் எந்த பகுதியிலும் நியமனம் செய்யப்படுவார்கள். வெளியூர்களில் இருந்து வரும் விண்ணப்பத்தாரர்கள் போக்குவரத்திற்கான ஏற்பாடுகளை தமது சொந்த செலவிலேயே செய்து கொள்ள வேண்டும்.

**ஓட்டுநருக்கான அடிப்படை தகுதிகள்**

| | |
|---|---|
| கல்வித்தகுதி : | 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| வயது : | நேர்முக தேர்வு அன்று 23 வயதுக்கு மேலும் 35 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| பாலினம் : | ஆண் |
| உயரம் : | 162.5 செண்டிமீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும் |
| ஓட்டுநர் தகுதி: | இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் Badge வாகன உரிமம் |
| அனுபவம் : | இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் எடுத்து குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் மற்றும் Badge வாகன உரிமம் எடுத்து குறைந்தபட்சம் 1 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும். |

மேற்குறிப்பிட்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தங்களுடைய கல்வி, ஓட்டுநர் உரிமம் மற்றும் அனுபவம் தொடர்பான அனைத்து அசல் சான்றிதழ்களையும் சரிபார்ப்பதற்காக கொண்டு வர வேண்டும்.

| | |
|---|---|
| தேர்வு முறை: | 1. எழுத்துத்தேர்வு, 2. தொழில்நுட்பத் தேர்வு, 3. மனிதவள துறை நேர்காணல், 4. கண்பார்வை சம்பந்தப்பட்ட தேர்வு, 5. சாலை விதிகளுக்கான தேர்வு |
| மாத ஊதியம் : | ரூ.11,100 (மொத்த ஊதியம்) |

ஓட்டுநனராக தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு 9 நாட்களுக்கு முழுமையான வகுப்பறை பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில், தங்கும் வசதி மற்றும் தினசரி உணவுக்கான ரூ.100/- படியும் வழங்கப்படும்.

**மருத்துவ உதவியாளருக்கான அடிப்படை தகுதிகள்**

| Category | Qualification | Age | Work | Salary / Stipend |
|---|---|---|---|---|
| EMT | B.Sc., நர்சிங் அல்லது GNM, ANM, D.Pharm, DMLT (12 ம் வகுப்பிற்கு பிறகு 2 ஆண்டுகள் படித்திருக்க வேண்டும்.) அல்லது Life Science Graduates (B.Sc., Zoology, Botany, Bio chemistry, Micro Biology, Plant Biology) | 20 - 30 | Willing to work in shifts (Day shift or night shift) | Rs.11,600/- (Plus allowances as applicable) |
| EMT – Trainee | One year technician course from only Govt Medical College 12 ம் வகுப்பிற்கு பிறகு 1ஆண்டு படித்திருக்க வேண்டும்.) 1.EMT Technician, 2.Ortho Technician, 3.Respiratory Technician, 4.ECG Technician, 5.OT Technician | 19 - 30 | Willing to work in shifts (Day shift or night shift) | Rs.10,600/- (Plus allowances as applicable) |

| | |
|---|---|
| பாலினம் : | ஆண் மற்றும் பெண் |
| தேர்வு முறை: | 1. எழுத்துத்தேர்வு, 2. மருத்துவ நேர்முகம் - உடற்கூறியல் முதலுதவி, அடிப்படை செவிலியர் பணி தொடர்பானவை, 3. மனிதவள துறையின் நேர்முகம் |

மருத்துவ உதவியாளராக தேர்வு செய்யப்பட்டவர்கள் 50 நாட்களுக்கு முழுமையான வகுப்பறை பயிற்சி, மருத்துவமனை மற்றும் ஆம்புலன்ஸ் சார்ந்த நடைமுறை பயிற்சிகளும் அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் தங்கும் வசதி மற்றும் தினசரி உணவுக்கான ரூ.100/-படியும் வழங்கப்படும்.

மேலும் விபரங்கள் அறிய கைபேசி எண். 7397724853 (அ) 7397724825 என்ற எண்ணில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 வரை தொடர்பு கொள்ளலாம். திருநெல்வேலி மற்றும் அருகில் உள்ள மாவட்ட ஆர்முள்ள இளைஞர்கள், மருத்துவ சேவை ஆற்றும் இப்பணிக்கான தேர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.